| Page No.22 | |
|---|---|
| **<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>** | |
| நாள் | 13.03.2025 |
| O.S. No. | 157/2004 |
| வா.சா.1 | வித்யா |

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் வித்யா என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வித்யா | சமயம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

<u>12ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. இவ்வழக்கில் 12ஆம் பிரதிவாதியை எதற்காக சேர்த்துள்ளேன் என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் கிரையம் வாங்கியுள்ளதால் சேர்த்துள்ளேன். வழக்கு எத்தனையாவது அயிட்ட சொத்தை 12ஆம் பிரதிவாதி வாங்கினார் என்றால் வழக்கு 1வது அயிட்ட சொத்தை ஏமாற்றி வாங்கினார். மேற்படி கிரைய ஆவணம் செல்லாது என நான் இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். மேற்படி கிரைய ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பு வழக்கு சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்களை பார்த்தேன். 12ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1வது அயிட்ட சொத்தில் யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் 12ஆம் பிரதிவாதி ஒரு பகுதியிலும், மற்ற பகுதிகளிலும் நாங்கள் உள்ளோம். 1வது அயிட்ட சொத்தின் சுவாதீனம் எங்களிடம்தான் உள்ளது என்று சொன்னால் அது தவறு என்றால் அவர் கிரையம் வாங்கிய சொத்தில் அவர் உள்ளார், நான்

வழக்கு செய்துள்ளதால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 12ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரியல்ல. நான் சொல்லுகிறபடி இல்லை என்றும், 12ஆம் பிரதிவாதி 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் தேதி கிரையம் பெற்றார் என்றும், நான் இவ்வழக்கை அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும், 12ஆம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை தாக்கல் செய்தால் எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தாத்தாவான அண்ணாமலை முதலியாரின் பெயரில் உள்ளது. மேற்படி பட்டாவை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்தை, ராமசாமி முதலியார் சுயமாக கிரையம் பெற்று, மேற்படி சொத்தை 12ஆம் பிரதிவாதிக்கு சுயசம்பாத்திய சொத்து என குறிப்பிட்டு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, மேற்படி சொத்து எனது தாத்தா அண்ணாமலை முதலியாருக்கு பாத்தியப்பட்டது.

3. 1வது அயிட்ட சொத்து எனது தாத்தா அண்ணாமலை முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அண்ணாமலை முதலியாருக்கு பொது குடும்ப சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்பதை காட்டுவதற்கும், மேற்படி வருமானத்திலிருந்து என்ன என்ன சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதை காட்டுவதற்கும் ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. 12ஆம் பிரதிவாதி 1ஆம் அயிட்ட சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பே மேற்படி சொத்தில் 20 வருடமாக வாடகைதாரராக இருந்தார் என்றால் இல்லை, சுமார் 2 அல்லது 3 மாதங்கள்தான் இருந்தார்கள். மேற்படி 2 மாத காலத்திற்கு 12ஆம் பிரதிவாதி என்ன வாடகை கொடுத்தார் என்றால் சுமாராக ரூ.1,000/– கொடுத்திருப்பார். கிரைய ஆவணத்தில் 12ஆம் பிரதிவாதி 20 வருடமாக வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நான் தற்போது பொய்சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்துக்களை சரியான முறையில் மதிப்பீடு செய்து, உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அண்ணாமலை முதலியாரின் அனைத்து வாரிசுகளையும் நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, சேர்த்துள்ளேன்.

**<u>14ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. அண்ணாமலை முதலியாரின் மருமகள்களான சகுந்தலா மற்றும் மீனாட்சி ஆகியோர்கள் எனக்கு பாட்டிகள் ஆவார்கள். சகுந்தலாவின் கணவர் பெயர் சிவராமன் மற்றும் மீனாட்சியின் கணவர் பெயர் A.C.ராமன் ஆகும். அண்ணாமலை முதலியார் இறப்பதற்கு முன்பு, தனது மகன்கள் மற்றும் மருமகள்கள் பெயரில் வங்கியில் பணம் எதுவும் வைப்பீடு செய்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சகுந்தலா மற்றும் மீனாட்சி ஆகியோர்கள் வசதியான குடும்பத்திலிருந்து, வசதியான குடும்பத்திற்குதான் மருமகள்களாக சென்றார்கள் என்றால் இல்லை. எந்த பாட்டிக்கு வசதி இல்லை என்றால் ஞாபகமில்லை.
2. வழக்கு 4வது அயிட்ட சொத்தை சகுந்தலா மற்றும் மீனாட்சி எப்போது கிரையம் வாங்கினார்கள் என்றால் அவர்கள் கிரையம் வாங்கவில்லை. மேற்படி சகுந்தலா மற்றும் மீனாட்சிக்கான வருமானம் குறித்து நான் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு 4வது அயிட்ட சொத்தை குறித்து, எனது தாத்தா அண்ணாமலை முதலியார் பாட்டிகள் பெயரில் ஏதாவது ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. எனது பாட்டிகளான சகுந்தலா மற்றும் மீனாட்சியின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு தற்போது 42 வயதாகிறது.
3. வழக்கு 4வது அயிட்ட சொத்தில் யார் சுவாதீனத்திலிருந்துகொண்டு, நிலவரி மற்றும் மற்ற வரிகளை செலுத்தி வருகிறார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி 4வது அயிட்ட சொத்திற்கு, பவானியைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் வரி செலுத்தி, அவர்தான் சுவாதீனத்தில் உள்ளார். ஆறுமுகம் என்பவரை நான் பவானி தாத்தா என்று அழைப்பேன் என்றால் சரிதான். மேற்படி ஆறுமுகம் தற்போது உயிருடன் இல்லை. வழக்கு 4வது அயிட்ட சொத்திற்கு ஆறுமுகம் வரி செலுத்தி, சுவாதீனத்தில் உள்ளதாக தற்போதுதான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பவானி

நகராட்சியிலிருந்து வழக்கு 4 வது அயிட்ட சொத்திற்கான வரியை யார் செலுத்துகிறார்கள் என்பதற்கான ஆவணத்தை பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுகிறபடி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. வழக்கு 4வது அயிட்ட சொத்தை நான் எப்போது சென்று பார்த்தேன் என்றால் சுமாராக 10 வருடம் இருக்கும், நான் 12 வயது இருக்கும்போது சென்று பார்த்தேன். 14 பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். மேற்படி எதிர்வழக்குரையில் சொத்து எப்படி பாத்தியம் என்று 14ஆம் பிரதிவாதி சொல்லியுள்ளாரா என்றால் தற்போது ஞாபகமில்லை. மேற்படி எதிர்வழக்குரை தமிழில் உள்ளதா, ஆங்கிலத்தில் உள்ளதா என்றால் ஆங்கிலத்தில் உள்ளது.
5. 14ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்தை 2 பாட்டிகளும் சேர்ந்து எழுதிக் கொடுத்தார்களா அல்லது ஒரு பாட்டி மட்டும் எழுதினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சகுந்தலா மற்றும் மீனாட்சி ஆகியோர்களில் யார் யாருக்கு உயில் எழுதி வைத்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 14ஆம் பிரதிவாதி இவ்வழக்கில் அவசியமற்ற நபர் என்றும், வழக்கு 4 வது அயிட்ட சொத்து, சகுந்தலா மற்றும் மீனாட்சிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அண்ணாமலை முதலியாரின் பணத்தை வைத்துதான் 1984ஆம் ஆண்டில் சகுந்தலாவும், மீனாட்சியும் கிரையம் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1978ஆம் ஆண்டு இறந்துபோன அண்ணாமலை முதலியார், 1984ஆம் ஆண்டில் சொத்தை கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.
6. 14ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கியதிலிருந்து அவர்தான் வழக்கு 4வது அயிட்ட சொத்தில் சுவாதீனத்தில் இருந்துகொண்டு, மேற்படி சொத்திற்கான வரிகளை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. சகுந்தலாவிற்கு மீனாட்சி பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின்மூலம் சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. 14ஆம் பிரதிவாதியிடமிருந்து சட்ட விரோதமாக பணத்தை பெற வேண்டும் என்பதற்காக, பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.